2015 செப்டம்பர் 4]

அறிவூக்கம் இவையாவும் நெஞ்சத்தே நிறைந்து, வீரத்திற்கும், விவேகத்திற்கும் விலாசமாகிய வேதா நிலையத்து வேலுநாச்சியே, எங்கள் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) நான் நாளும் வணங்குகிற அன்னையே, தங்கள் பொற்பாத மலர்களில் என் பணிவான புகழ்மாலையைச் சூட்டி, வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையில் மறுமலர்ச்சி கொண்டுவந்து, மக்கள் நல்வாழ்வு காணும் நலத் திட்டங்கள் தந்திடும் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில் திருமயம் தொகுதி, நெடுங்குடி ஊராட்சி, இராசாவயல் கிராமத்தில், மேய்ச்சல் தரை புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கும் 21 குடும்பத்தினருக்கும், நிலத்தை வகைமாற்றம் செய்து, பட்டா வழங்கப்படும் என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் நல்லறிவிப்பிற்கு என் சார்பிலும், தொகுதி மக்கள் சார்பிலும் இதயம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 238, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

238—

ஆவின் பாலகம்

***53882—திருமதி க. அழகுவேலு:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் பேரூராட்சியில் ஆவின் பாலகம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர்

அவர்களே, 'எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்ற எண்ணத்தின் அடிப்படையில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து என் பதிலைத் தெரிவிக்க விழைகின்றேன்.

ஆம். விழுப்புரம், கடலூர் மாவட்ட கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின்மூலம் தியாகதுருகம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் ஆவின் பால் விற்பனை முகவோர் தேர்வு செய்யப்பட்டு, மேற்படி முகவர்மூலம் கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி, தியாகதுருகம் பேரூராட்சிப் பகுதியில் ஆவின் பாலகம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.

திருமதி க. அழகுவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைநோக்குப் பார்வையோடு, தமிழகத்தை உலகத் தரத்திற்கு உயர்த்தி, பொருளாதாரப் புரட்சிக்கு இட்டுச் சென்ற மெய்ஞான சிற்பியே! ஏழையெளிய மக்கள் பயன்பெறுகிற வகையில் ஆடு, மாடுகளைக் கொடுத்து, வெண்மைப் புரட்சியை ஏற்படுத்திய புரட்சித் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) தங்கள் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் பேரூராட்சியில் ஆவின் பாலகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சின்னசேலத்திலுள்ள Chilling Centre, 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்டது. மாண்புமிகு அம்மா அவர்களின் வெண்மைப் புரட்சியால், அந்தப் பகுதியில் பால் உற்பத்தி இரண்டு இலட்சம் லிட்டருக்கும் அதிகமாக உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு இதைக் கொண்டுசென்று, தியாகதுருகம்

2015 செப்டம்பர் 4]

பேரூராட்சியில் ஒரு Chilling Centre *அமைத்துத் தர முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'தியாகதுருகம் பேரூராட்சியில்* Chilling Centre *அமைத்துத் தர வேண்டும்' என்று கோரிக்கை விடுத்துள்ளார்கள்.* Chilling Centre *அமைக்க வேண்டுமெனில், பால் கலெக்ஷன் 30,000 லிட்டர் முதல் 40,000 லிட்டர் வரை இருக்க வேண்டும்; சுமார் 40 கி.மீ. முதல் 50 கி.மீ. சுற்றளவு வரை உள்ள இடங்களுக்குச் சென்று பால் கொள்முதல் செய்ய வேண்டும்; 2½ ஏக்கர் நிலம் வேண்டும். கள்ளக்குறிச்சி, தியாகதுருகம் அருகில் சின்னசேலம் உள்ளது. அங்கு ஏற்கெனவே ஒரு* Chilling Centre *உள்ளது; மிக அருகில் 10 கி.மீ. தூரத்தில் தச்சூரிலும், 4 கி.மீ. தூரத்தில் சிறுவாங்கூரிலும் இரண்டு* bulk milk coolers *உள்ளன. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள தியாகதுருகத்தில்* bulk milk cooler *அமைத்துத் தருவதற்கான வாய்ப்பு இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, தேவை, வாய்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.*

திருமதி க. அழகுவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் இரண்டு இலட்சம் லிட்டருக்கும் அதிகமாகப் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. அதுமட்டுமல்ல, சுற்றியுள்ள கிராமங்களான நயினார்பாளையம், சிறுவாங்கூர், ரெங்கநாதபுரம் போன்ற பகுதிகளிலிருந்து நேரடியாக சென்னைக்கும், விழுப்புரத்திற்கும் பால் அனுப்பப்படுகிறது. அந்த அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பால் உற்பத்தி அதிகமாக இருக்கிறது. விழுப்புரம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய பகுதியாகவும், விவசாயிகள் அதிகமாக இருக்கும் பகுதியாகவும் உள்ளது. எனவே, அப்பகுதிவாழ் விவசாய*

மக்களின் நலன் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, தியாகதுருகத்தில் ஒரு Chilling Centre அமைத்துத் தர வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வு செய்யப்பட்டு, தேவை, வாய்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 239, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

239—

கூடுதல் வகுப்பறைக் கட்டடம்

***41724—திரு. டி.ஆர்.பி. ராஜா:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், இராயபுரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகளுடன்கூடிய புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், இராயபுரம் அரசு மேல்நிலைப் பள்ளி இருபாலர் பயிலும் பள்ளியாகும். இப்பள்ளியிலுள்ள வகுப்பறைகளின் எண்ணிக்கை